**களனி ஆற்றின் மேல் புதிய பாலத்தை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம் - 2017**

களனி ஆற்றின் மேல் புதிய பாலத்தை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்தின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஐசீஏ) இடையேயான 2014 மார்ச் 28 ஆந் திகதிய எஸ்எல்-பீIII இலக்கமுடைய கடன் உடன்படிக்கையின் 01 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சும் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகும். போக்குவரத்து நெரிசலைக் குறைத்து அதனை நெரிசல் அற்றதாக்குவதற்கு களனி ஆற்றின் மேல் அதி உயர் போக்குவரத்து இணைப்பைக் கொண்ட புதிய பாலம் ஒன்றை நிர்மாணித்து அதன் மூலம் கொழும்பு நகரின் போக்குவரத்து வலையமைப்பு அபிவிருத்திக்கு பங்களித்து பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 34,788 மில்லியனுக்கு நிகரான 46,446 மில்லியன் ஜப்பானிய யென்னாகும். இதில் ரூபா 26,230 மில்லியனுக்கு நிகரான 35,020 ஜப்பானிய யென் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்கப்படவிருந்தது. 2014 யூலை 01 ஆந் திகதி நடவடிக்கைகளை ஆரம்பித்த செயற்திட்டம் 2023 யூலை 01 ஆந் திகதி முடிவடையவிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்

தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்க நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்குக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(உ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதியானது அது வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தது என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டி 4.2.1 க்கமைய 03 ஆண்டுகளுக்கான பொருட் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அது அரையாண்டுக்கு ஒருமுறை நாளதுவரையாக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஓராண்டிற்காக பொருட் கொள்வனவுத் திட்டமே தயாரிக்கப்பட்டிருந்ததுடன் திட்டத்தை நாளதுவரையாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதியப் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு நிதியேற்பாடு மற்றும் மீளாய்வாண்டின்போதிலானதும் 2017 டிசெம்பர் 31 வரையானதுமான நிதியப் பயன்பாட்டின் சில குறிப்பிடத்தக்க புள்ளிவிபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| தோற்றுவாய் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதியப் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின்போது | | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜப்பானிய யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பானிய யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பானிய யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 35,020 | 26,230 | 8,000 | 5,554.24 | 7,390.47 | 7,005.43 | 9,151.88 |
| இலங்கை அரசாங்கம் | 11,426 | 8,558 | 750 | 469.64 | 624.90 | 1,088.75 | 1,435.93 |
| | **46,446** | **34,788** | **8,750** | **6,023.88** | **8,015.37** | **8,094.18** | **10,587.81** |

மேலே குறிப்பிடப்பட்ட வெளிநாட்டுக் கடன் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புக்குப் புறம்பாக, உள்ளூர் வங்கி ஒன்றிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையால் பெறப்பட்ட கடனில் ரூபா 285.49 மில்லியன் செயற்திட்ட நடவடிக்கைகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், பாலத்திற்கான விரிவான வடிவமைப்பு, மின்கடத்திப் பாதையை மாற்றியமைத்தல், இலங்கை ஓட்டோ மொபைல் பயிற்சி நிறுவனத்தினதும் இலங்கை அணுசக்தி அதிகாரசபையினதும் இடங்களை மாற்றியமைப்பதற்கு கட்டிடங்களை நிர்மாணித்தல் என்பன செயற்திட்ட நடவடிக்கைகளில் உள்ளடங்கியிருந்தன. அவற்றுள் பால

வடிவமைப்பு வேலையும் இலங்கை ஓட்டோ மொபைல் நிறுவனத்தினது கட்டிட நிர்மாணப் பணியும் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இலக்கிடப்பட்டவாறு நடைபெற்றவாறிருந்தன. எவ்வாறாயினும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தற்போதுள்ள உயரத்தில் அமைந்துள்ள உயர் வோல்ட்டேஜ் மின் கடத்திப் பாதையின் செயல் முன்னேற்றம் 20 சதவீத குறைவான செயல் முன்னேற்றத்தையே காட்டியது. மேலும், ஹோமாகமவில் ஹல்பராவ எனுமிடத்தில் அமைந்துள்ள இலங்கை அணுசக்தி அதிகாரசபையினது கட்டிட நிர்மாணப் பணி பிரதேச வாசிகளது எதிர்ப்பு காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

மேலே குறிப்பிடப்பட்டவாறு, இலங்கை அணுசக்தி அதிகார சபை தனக்குத் தேவையான கட்டிடங்களை நிர்மாணித்து ஹல்பராவுக்கு இடமாற்றம் பெறவிருந்போதும், கட்டிடத்தை அமைக்கும் இடம் பின்னர் ஒறுகொடவத்தைக்கு மாற்றம் செய்யப்பட்டதால் ஹல்பராவையில் அத்திவாரமிடல் மற்றும் நிலத்தைத் தோண்டுவது போன்றவற்றிற்கு செலவிடப்பட்ட ரூபா 34 மில்லியன் பயனற்ற செலவினமாகியது.

### 3.5 காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள்

---

காணிச் சுவீகரிப்புத் திட்டத்தின் பிரகாரம், 948 காணித் துண்டுகள் சுவீகரிக்கப்படவிருந்தன. எனினும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 650 காணித் துண்டுகள் மாத்திரமே சுவீகரிக்கப்பட்டிருந்தன. மேலும், இழப்பீடாக ரூபா 714 மில்லியனும் அதன் மீதான வட்டியாக ரூபா 44.51 மில்லியனும் அத்தினத்தில் உள்ளவாறு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.